பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 07 2024 **THURSDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. பருவநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்வதில் மாணவர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. விமான நிறுவனங்களின் கட்டண நடைமுறையில் அரசு தலையிடாது என்று சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

3. தமிழக சாலை பராமரிப்புப்பணிகளுக்காக மூன்றாண்டுகளில் ஆயிரத்து 214 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

4. பங்களாதேஷில் இருந்து ஆறாயிரத்து 700 இந்திய மாணவர்கள் பாதுகாப்புடன் தாயகம் அழைத்து வரப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. **Zug** ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>>

குடியரசுத் தலைவராக பதவியேற்று இரண்டாண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, திருமதி திரௌபதி முர்மு குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று பள்ளி மாணவர்களுக்கு பாடம் கற்பித்தார்.

நவீன உலகில் மாணவர்கள் எதிர்கொள்ளக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் குறித்து, குடியரசுத் தலைவர் கலந்துரையாடினார்.

பருவநிலை மாற்றம், உலக வெப்பமயமாதல் போன்றவற்றால் ஏற்படும் சவால்கள் குறித்தும் அவர் உரையாடினார்.

சுற்றுச்சூழலை பாதுகாக்க மாணவர்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்றும் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>>

நாடு முழுவதும் 9 ஆயிரத்து 861 கிலோமீட்டர் தொலைவிலான நெடுஞ்சாலைப்பணிகள் பசுமை வழித்தடங்களாக நிறைவேற்றப்பட்டு வருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இவற்றில் ஐந்து விரைவுச்சாலைகளும், 22 அணுகு சாலைகளும் அடங்கும் என்று கூறினார்.

இதற்காக நான்கு லட்சத்து 19 ஆயிரத்து 130 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் சாலை பராமரிப்புப்பணிகளை மேற்கொள்வதற்காக கடந்த மூன்றாண்டுகளில் ஆயிரத்து 214 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு நிதின்கட்கரி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

விமான நிறுவனங்கள் நிர்ணயிக்கும் கட்டணத்தை முறைப்படுத்துவதில் அரசு தலையிடாது என்று சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், தற்போதுள்ள விமான கட்டண நடைமுறையில் அரசு தலையிடும் திட்டம் ஏதும் இல்லை என்று கூறினார்.

விமான கட்டணங்களை முடிவு செய்வதில் சம்பந்தப்பட்ட விமான நிறுவனங்கள் சந்தை நிலவரத்திற்கு ஏற்ற அணுகுமுறையை கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

என்றாலும், சாமானிய மக்கள் குறைந்த கட்டணத்தில் விமான பயணம் மேற்கொள்வதற்கு மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

நாட்டின் 500-வது சமுதாய வானொலி நிலையமான அப்னா வானொலியை தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் காணொலி வாயிலாக இன்று தொடங்கிவைத்தார்.

ஐஸ்வாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், மிசோரம் முதலமைச்சர் திரு லால்டு ஹோமா ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பத்தாவது தேசிய சமுதாய வானொலி விருதுகளை திரு அஷ்வினி வைஷ்ணவ் அறிவித்தார்.

அப்போது பேசிய அவர், இந்த சமுதாய வானொலியின் மூலம் இப்பகுதி மக்களிடையே குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறினார்.

மத்திய அரசின் கிழக்கு நோக்கிய கொள்கைக்கு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இது அமைந்திருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

இதுபோன்ற சமுதாய வானொலி நிலையங்கள் பெரிதும் பயனுள்ளவையாக இருக்கும் என்று இணையமைச்சர் திரு எல். முருகன் கூறினார்.

தகவல் தொடர்பை வழங்குவதற்கான உறுதிபாட்டை நிறைவேற்றும் வகையில் இத்தகைய வானொலி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் திரு எல். முருகன் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>>

நாடு முழுவதும் நீதித்துறை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மாநில அரசுகளுக்கு 11 ஆயிரத்து 294 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு ஒதுக்கியிருப்பதாக சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதுகுறித்து பேசிய அவர், அதன்படி, தமிழகத்திற்கு 433 கோடியே 79 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், இதில் 398 கோடி ரூபாய் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

புதுச்சேரிக்கு ஒதுக்கப்பட்ட 71 கோடியே 95 லட்சம் ரூபாயில் 65 கோடி ரூபாய் அளவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நீதிமன்ற கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், மின்னணு கணினி அறை உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளுக்காக மத்திய அரசு நிதியுதவி அளித்து வருவதாகவும் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்தார்.

விரைவு நீதிமன்றங்கள் பற்றி குறிப்பிட்ட அவர், நாடு முழுவதும் 410 சிறப்பு போக்சோ நீதிமன்றங்கள் உட்பட 755 விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றின் மூலம் 2 லட்சத்து 53 ஆயிரம் வழக்குகளுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

மக்களவையின் மாண்பினை உறுப்பினர்கள் தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்று அதன் தலைவர் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்களவை இன்று காலை கூடியதும் கேள்விநேரத்தின்போதும், பட்ஜெட் மீதான விவாதத்தின்போதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து கூச்சல், குழப்பத்தில் ஈடுபட்டதால் அவை இருமுறை ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகலில் அவை மீண்டும் கூடியபோது பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், உறுப்பினர்கள் அவையின் கண்ணியத்தை கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பேசிய மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா, உறுப்பினர்கள் ஆதாரமற்ற தகவல்களை தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும் என்று கூறினார்.

<<<<<<>>>>>>>

பங்களாதேஷில் ஏற்பட்ட வன்முறை காரணமாக அங்கிருந்து ஆறாயிரத்து 700 இந்திய மாணவர்கள் தாயகம் அழைத்து வரப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரந்தீர் ஜெய்ஷ்வால், மாணவர்களை அழைத்து வருவதில் பங்களாதேஷ் அரசு சிறப்பான ஒத்துழைப்பை வழங்கியதாக கூறினார்.

மாணவர்களின் பாதுகாப்பை டாக்காவில் உள்ள இந்திய தூதரகம் உறுதி செய்ததாகவும், விமானங்கள் அல்லது எல்லைப்பகுதி வழியாக அவர்கள் பயணிப்பதை தூதரகம் உறுதி செய்ததாகவும் அவர் மேலும் கூறினார். பங்களாதேஷில் இயல்பு நிலை விரைவில் திரும்பும் என்று தாம் நம்புவதாகவும் திரு ரந்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

நாடு முழுவதும் மொத்தம் 15 ஆயிரத்து 300 மெகாவாட் திறன் கொண்ட 21 அணு உலைகள் அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், நாட்டின் தற்போதைய அணுசக்தி நிறுவு திறன் எட்டாயிரத்து 180 மெகாவாட்டாக உள்ளது என்று கூறினார். வரும் 2031-32-ஆம் ஆண்டில் இந்த அணுசக்தி திறனை 22 ஆயிரத்து 480 மெகாவாட்டாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

சென்ற ஆண்டில் இந்தியாவிற்கு ஒன்பது கோடியே 24 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. மாநிலங்களவையில் இதுகுறித்து பேசிய மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், இந்தியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவதாக கூறினார்.

உள்நாட்டில் சுற்றுலா தலங்களுக்கான சந்தை வாய்ப்புகளை மேம்படுத்த தொழில் துறையினர் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுடன் இணைந்து அரசு செயல்பட்டு வருவதாக திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

இயற்கை எரிவாயு மூலம் இயங்கக்கூடிய வாகனங்களின் விற்பனை கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்திருப்பதாக பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி தெரிவித்துள்ளார். மக்களவையில் இதனை தெரிவித்த அவர், **CNG** அடிப்படையிலான வாகனங்கள் கடந்த 22-ஆம் தேதிவரை 72 லட்சத்து 10 ஆயிரமாக உள்ளது என்று கூறினார். நாட்டின் பல்வேறு நகரங்களிலும் **CNG** உள்கட்டமைப்பு வசதிகள் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு முறைப்படுத்தும் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு சுரேஷ் கோபி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மக்கள் நீதிமன்றங்கள் நாட்டின் மாற்று தீர்ப்பாயங்கள் மூலம் தீர்வுகாணும் நடைமுறைக்கு வலுசேர்த்து வருவதாக உச்சநீதிமன்ற நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா தெரிவித்துள்ளார். பாரம்பரிய நீதிமன்ற நடைமுறைக்கு அப்பாற்பட்டு, வழக்குகளை தீர்ப்பதில் இந்த நீதிமன்றங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் அவர் கூறினார். வரும் 29-ஆம் தேதிமுதல் அடுத்த மாதம் 3-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள சிறப்பு மக்கள் நீதிமன்ற அமர்வுகளில் வழக்கு தாக்கல் செய்திருப்போர் கலந்துகொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

ஸ்பெயின் நாட்டின் மீன்பிடி படகு ஒன்று தெற்கு அட்லாண்டிக் கடலில் மூழ்கி ஏற்பட்ட விபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். மேலும் நான்கு பேரை காணவில்லை. காணாமல் போனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Zug** ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-7, 6-4, 10-5 என்ற செட் கணக்கில், சுவிட்சர்லாந்தின் **Damien Wanger – Jakub Paul** இணையை வென்றது.

-----------------

பாரிஸ் ஒலிம்பிக் வில்வித்தை போட்டியில், இந்தியா மகளிர் குழு பிரிவில் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<END>>>>>>>